கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

STC No.51/2023

நாள். .2025 ம.சா.1 திரு.வேல் வினோத்

த/பெ திரு.மாணிக்கம்

எதிரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதித்தன் பேரில், சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) என்னுடை சொந்த ஊர் என்றால் நம்பி தலைவன்பட்டையம். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் டிகிரி முடித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணமானது நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ம.சா.ஆ.4 ஆவணத்தில் நான் தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். எதிரி எனக்கு யார் மூலம் பழக்கம் ஆனார் என்றால் திருக்குறுங்குடி வரும்போது எனக்கு பழக்கம் ஆனார். எனக்கு எதிரியை யார் அறிமுகப்படுத்தினார் என்றால் நான் Axis வங்கி, திருக்குறுங்குடியில் வேலை பார்த்தேன், அப்போது எதிரி வங்கிக்கு வந்து செல்லும் வாடிக்கையாளர் ஆவார். மேற்படி வங்கியில் நான் என்ன பணியில் இருந்தேன் என்றால் கோல்டு லோன் ஆபிஸராக இருந்தேன். எதிரி நான் பணிபுரியும் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளாரா என்றால் தெரியாது.

2) எதிரி என்னை வங்கியில் எந்த தேதியில் எந்த வருடம் என்னை சந்தித்து அறிமுக ஆனார் என்று சொல்லமுடியுமா என்றால் 2022 ம் வருடம் அறிமுகமானார், மாதம், தேதி ஞாபகம் இல்லை. நான் எத்தனை முறை எதிரியை நேரில் சந்தித்து பேசி இருப்பேன் என்றால் காசோலை கொடுப்பதற்கு முன்னர் சுமார் 10 முறைக்கு மேல் சந்திந்து பேசி இருப்பேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் நான் விவசாயம் செய்வதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் நான் விவசாயம் செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்வது குறித்து நிலங்களில்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.12 17:13:48 +0530

விவரங்கள், சர்வே எண்கள், நிலத்தின் விஸ்தீரணங்கள் பற்றி நான் சொல்லி உள்ளேனா அல்லது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா  என்றால் இல்லை. நான் வங்கியில் வேலை செய்வதால் வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்ததில்லை. நான் எதிரிக்கு ரூ.4 இலட்சம் கொடுத்ததற்கான எந்த வகையில் வருமானம் வந்தது என்பதை பற்றி எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3) 2 ம் எதிரி தான் ராஜா ஸ்ரீ hollow bricks  என்ற கம்பெனியை நடத்தி வருகிறார் என்பதை காட்ட ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு காசோலை மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

(எதிரி  தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்கள் குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.12 17:13:52 +0530